பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 08 செவ்வாய்க்கிழமை 24.08.2021 கதிர் 156

## ஊரடங்கு உத்தரவை மீறிய மேலும் 639 பேர் மாட்டினர்!

ஊரடங்குச்சட்டம்மற்றும்தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறிய குற்றச்சாட்டில் கடந்த 24 மணிநேரத்தில் 639 பேர் கைதுசெய்யப்பட் டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு இன்று காலை தெரிவித்துள்ளது.

இதன்படி தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை 57 ☞2

# ‘அரசியல் புரட்சி வீரன்’ மங்களவை காவுகொண்ட கொடிய கொரோனா

## உள்நாட்டு, வெளிநாட்டு முக்கியஸ்தர்கள் ஆழ்ந்த இரங்கல்



இலங்கை அரசியலில் அதிரடிப் புரட்சிகளை ஏற்படுத்தி வந்த செயல் வீரன் - முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர இன்று கொழும்பில் கால மானார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி, கொழும்பு தனியார் வைத்தி யசாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் காலமானார்.

மங்கள சமரவீர உயிரிழக்கும் போது அவருக்கு 65 வயதாகும்.

இவர் முன்னாள் அமைச்சர் மஹாநாம சமரவீர மற்றும் கேமா பத் மாவதி ஆகியோரின் புதல்வராவார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து 1983ஆம் ஆண்டு ☞2

## சிரேஷ்ட தலைவரை இழந்துவிட்டது நாடு

### பிரதமர் மஹிந்த கவலை



இலங்கை இன்று ஒரு சிரேஷ்ட தலைவரை இழந்து விட்டது எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

மறைந்த மங்கள சமரவீர நாட்டை நேசித்தவர் எனவும் பிரதமர் குறிப்பிட்டார்.

டுவிட்டர் செய்தியொன்றின் ஊடாக பிரதமர் மஹிந்த ராஜ பக்ஷ, மங்கள சமரவீரவின் மறைவுக்கு இரங்கல் தெரிவித் துள்ளார். ☞2

## தமிழர்கள் அனைவருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு!

### இரங்கல் செய்தியில் சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு



முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் மரணம் தமிழர்கள் அனைவருக்கும் ஈடுசெய்ய முடியாத பாரிய இழப் பாகும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அவர் வெளியிட் டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

முன்னாள் அமைச்சரும் தமிழ் மக்களின் உண்மையுள்ள நண்பருமான மங்கள சமரவீரவின் எதிர்பாராத மறை ☞2

## மனச்சாட்சியின் அடிப்படையில் செயற்பட்ட யுக புருஷரே மங்கள

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் ‘டுவிட்’



மனச்சாட்சியின் அடிப்படையில் தான் நம்புகின்ற கோட்பாட்டுடன் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட யுக புருஷரே மங்கள சமரவீர என்று எதிர்க் கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேம தாஸ தெரிவித்தார்.

டுவிட்டர் செய்தியொன்றின் ஊடாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேம தாஸ, முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் மறைவுக்கு ☞2

## மீண்டும் சந்திக்கும் வரை கண்ணீருடன் விடைபெறு

### மனோ எம்.பி. உருக்கம்



‘வெள்ளை வான் கடத்தல்காரர் பக்கத்தி லிருந்து கடத்தப்படுவோர் பக்கத்துக்கு நல் வரவு’ - 2007இல் நாடாளுமன்றத்தில் அரசு பக்கமிருந்து எதிரணிப் பக்கம் நீங்கள் வந்த போது நான் அனுப்பிய இக்குறிப்பு ஞாபகமி ருக்கின்றதா? மீண்டும் சந்திக்கும் வரை கண்ணீருடன் விடை பெறு நண்பா. ☞2

### கொரோனாத் தொற்றுக்குள்ளாகிய

## தேர்தல் ஆணையர் மூச்சுத் திணறல் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதி



கொரோனா வைரஸ் தொற் றுக்குள்ளாகி இருந்த தேர்தல் கள் ஆணையாளர் ஜெனரல் சமன் ஸ்ரீ ரத்நாயக்க கொத்தலா வல பாதுகாப்பு பல்கலைக்கழக வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட் டுள்ளார்.

கொரோனாத் தொற்றுக் குள்ளானதன் பின்னர் அவர் கண்டியிலுள்ள தனது வீட் டில் தனிமைப்படுத்தப்பட்டிருந் தார்.

வீட்டில் தனிமைப்படுத்தலில் இருந்த சந்தர்ப்பத்தில் அவருக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டதை யடுத்து அவர் தெல்தெனிய வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டதைத் தொடர்ந்து கொத்தலா வல பாதுகாப்பு பல்கலைக்கழக வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டுள்ளார்.

அவருக்கு ஒட்சிசன் வழங் கப்பட்டதைத் தொடர்ந்து தற் போது அவரின் உடல்நிலை தேறி வருகின்றது என வைத்தி யசாலைத் தகவல்கள் தெரி வித்தன.




## 12 வயது மாணவியை சாகடித்த கொரோனா

### நாவலவில் பெரும் சோகம்

கொழும்பு, நாவல ஜனாதிபதி மகளிர் வித்தியாலயத்தில் கல்வி கற்று வந்த 12 வயது மாணவி ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நிலையில் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார். ☞2

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



## மீண்டும்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் மறைவு தொடர்பில் மிக உருக்கமான டுவிட்டர் செய்தியை தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. விடுத்துள்ளார்.

அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளவை வருமாறு:-

2005 - 2009 வரை, கொழும்பில் அடைக்கலம் புகுந்திருந்த வடக்கு, கிழக்கு தமிழர்கள், அதிகாரமிக்க வெள்ளை வான் கடத்தல் பயங்கரவாதக் கும்பலினால் 'முனிசிபலிட்டி நாய்'களைப் பிடிப்பதைப் போல், பிடித்து, கடத்தப்பட்டு, கொல்லப்பட்டு, பற்றைகளில் சடலங்களாக வீசப்பட்டுக் கொண்டிருந்த காலம். அதன்போது, கொழும்பு எம்.பியாக நான் வருவது வரட்டும் எனப் போராடிக் கொண்டிருந்த வேளை, மங்கள சமரவீர எனக்கு இரகசியமாக செய்தி அனுப்பினார்.

மங்கள சமரவீர ஊடக அமைச்சராக இருந்த வேளை, தானும், ஸ்ரீபதி சூரியராச்சியும் அரசில் இருந்து விலக உள்ளதாகவும், அதுபற்றி தான் ஜனாதிபதிக்கு எழுதும் கடிதத்தில், மனித உரிமை மீறல் வெள்ளை வான் கடத்தலையும் ஒரு காரணமாக கூற உள்ளதாகவும், அது பற்றிய விவரங்களை தர முடியுமா? எனக் கேட்டிருந்தார்.

மங்கள சமரவீரவின் இந்த இரகசிய செய்தி, கொலைகார சூழலில், கடத்தல்கார கடலில் தத்தளித்து, ஒரு சிறு துரும்பு கிடைக்காதா என ஏங்கிக்கொண்டிருந்த எனக்கு படு உற்சாகத்தை தந்தது. அவருக்கு தகவல்களை அனுப்பினேன்.

மங்கள சமரவீர சொன்னதைப் போல், அரசில் இருந்து விலகும் தீர்மான காரணங்களை ஜனாதிபதிக்குத் தெரிவித்த கடிதத்தில் வெள்ளை வான் கடத்தல் மனித உரிமை மீறல் என்பதையும் காரணமாகக் கூறி இருந்தார். பின்னர் 2007 ஜூன் 15 திகதியன்று நாடாளுமன்றத்தில் அரசு பக்கம் இருந்து எதிரணிப் பக்கம் அவர் வந்து அமர்ந்தார். அவர் வரப்போவதை அறிந்த நான் சில நிமிடங்களுக்கு முன், வெள்ளை வான் கடத்தல்காரர் பக்கத்திலிருந்து கடத்தப்படுவோர் பக்கத்துக்கு நல்வரவு என்று என் கையால் எழுதிய சிறு குறிப்பை அவருக்கு அனுப்பினேன். அதை வாசித்து என்னைப் பார்த்து மங்கள சமரவீர கையைக் காட்டி, சிரித்தது இன்னமும் என் கண்களில் நிழலாடுகிறது.

மங்கள சமரவீர கட்சி மாறியது, எதிரணியில் இருந்து, பதவி, பவிசு வேண்டி, அதிகாரம் உள்ள ஆளும் கட்சிக்கு அல்ல என்பது நாம் கவனத்தில்கொள்ள வேண்டும்.

அன்று 'தேசபக்த' யுத்தம் என்று, போர் நடந்துகொண்டிருந்த வேளையில், யுத்த களத்துக்கு வெளியேயும் தமிழர் கடத்தப்பட்டு, கொலை செய்யப்பட்டுக்கொண்டிருந்த வேளையில், பல தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகளும் அதே அரசில் அமைச்சர்களாக இருந்த வேளையில், ஏனைய பல எதிரணி தமிழ் அரசியல்வாதிகள் நாட்டை விட்டு ஓடிப்போக வேண்டிய நிலைமை ஏற்பட்ட வேளையில்தான், அரசில் இருந்து மங்களதன் நண்பன் ஸ்ரீபதி சூரியராச்சியுடன் தைரியமாகப் பதவி விலகினார். அதனால்தான் எம் பக்கத்தை நோக்கிய, மங்கள சமரவீரவின் வருகை எனக்கு அன்று பெரும் உற்சாகத்தை தந்தது.

மங்கள சமரவீர கடைசி வரை இந்த நாட்டைப் பல்லின, பன்மத, பன்மொழி நாடாகவே கருதினார். இந்த எண்ணம், நாட்டின் அதிகாரபூர்வ கொள்கையாக மாற வேண்டும் என்பதே அவரது அவா. ஆகவே, அவரது எதிர்பாரா மறைவுக்கு முந்தைய அவரது வாழ்வு அர்த்தமுள்ளதாக அமைந்து அவரது ஆத்மா சாந்தியடைய, நாம் அனைவரும் இலங்கையர், இந்நாடு ஒரு பன்மைத்துவ நாடு என்ற கொள்கையை நிஜமாக்க நாம் உழைக்க வேண்டும் - என்றுள்ளது.

## 'அரசியல் புரட்சி..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் பயணத்தை ஆரம்பித்த இவர், 2007ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டார்.

1989ஆம் ஆண்டில் இருந்து 2020ஆம் ஆண்டு வரை மாத்தறை மாவட்டத்தில் இருந்து நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய மங்கள சமரவீர, பல்வேறு அமைச்சுப் பதவிகளையும் வகித்தார்.

1994ஆம் ஆண்டு தபால் மற்றும் தொலைத்தொடர்பு அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

2004ஆம் ஆண்டு துறைமுகங்கள், விமான சேவைகள் மற்றும் ஊடக அமைச்சராகவும், 2007ஆம் ஆண்டு வெளிவிவகார அமைச்சராகவும், 2015ஆம் ஆண்டு மீண்டும் வெளிவிவகார அமைச்சராகவும், இறுதியாக நிதி அமைச்சராகவும் செயற்பட்டார்.

முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோரை ஆட்சிக்குக் கொண்டுவருவதில், திரையின் பின் நின்று செயற்பட்டவராக மங்கள சமரவீர கருதப்படுகின்றார்.

2020ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகி, புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து, பொதுத் தேர்தலில் போட்டியிட வேட்புமனுத் தாக்கல் செய்தார்.

தேர்தலுக்கு முன்னரே வேட்புமனுவை வாபஸ் பெற்ற அவர், அரசியலில் இருந்து ஓய்வு பெறுகிறேன் என அறிவித்தார்.

இறுதியாக, அண்மையில் 'உண்மையான தேசப்பற்றாளர்' என்ற இயக்கத்தை ஆரம்பித்து, செயற்பட்டு வந்த நிலையிலேயே மங்கள சமரவீர கொரோனாத் தொற்றுக்குள்ளாகி மரணித்தார்.

இவரின் மறைவுக்கு உள்நாட்டு, வெளிநாட்டு முக்கியஸ்தர்கள் ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்து வருகின்றனர்.

## ஊரடங்கு..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயிரத்து 435 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மேல் மாகாணத்துக்குள் பிரவேசிக்கும் மற்றும் வெளியேறும் 13 இடங்களில் அமைக்கப்பட்டுள்ள வீதித் தடையில் நேற்று 1,369 வாகனங்களும், 2 ஆயிரத்து 284 நபர்களும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## தமிழர்கள்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாம் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

1989 இல் அரசியலில் கால் பதித்த மங்கள சமரவீர, 1994 இல் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் அரசில் அமைச்சராகப் பொறுப்பேற்றார். மேலும், தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வுக்காகப் பிரசாரம் செய்யும் 'சுது நெலும்' இயக்கத்தையும் முன்னெடுத்துச் சென்றார். அவர் இறக்கும் வரையிலும் இனவாதத்துக்கு எதிரான நிலைப்பாட்டில் தொடர்ந்திருந்தார்.

மங்கள சமரவீர, விடுதலைப்புலிகளுடனான போர் நடத்தப்பட்ட முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்த காரணத்தால் தனது அமைச்சரவைப் பதவியை இழக்க நேரிட்டது.

பின்னர் அவர் 2015 இல் வெளிவிவகார அமைச்சராக மீண்டும் பதவியேற்று, நீதி, பொறுப்பு மற்றும் நல்லிணக்கத்தை நோக்கி அயராது உழைத்தார். இன, மொழி, சாதி, மதம், அல்லது நம்பிக்கை வேறுபாடுகளுக்கப்பால் ஒவ்வொரு குடிமகனும் சமமாக நடத்தப்படும் ஓர் இலங்கையே அவரது தரிசனமாகக் காணப்பட்டது. மங்கள சமரவீரவின் மரணம் நம் அனைவருக்கும் ஈடுசெய்ய முடியாத பாரிய இழப்பாகும் - என்றுள்ளது.

## மனச்சாட்சியின்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரங்கல் தெரிவித்துள்ளார்.

மனித நேயத்துக்குக் கௌரவமளித்து மனச்சாட்சியின் அடிப்படையில் தான் நம்புகின்ற கோட்பாட்டுடன் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட யுக புருஷரான எமது நண்பர் மங்கள சமரவீரவே! உங்களின் ஆத்மா சாந்தியடையட்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் தனது டுவிட்டர் பதிவில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## சிரேஷ்ட........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மங்களவின் மறைவுச் செய்தியைக் கேட்டு நான் மிகுந்த அதிர்ச்சியடைகின்றேன். இலங்கைக்காக மங்கள ஆற்றிய சேவைக்கு நன்றி தெரிவிக்கின்றேன். மங்களவின் பிரிவால் வாடும் அவரது குடும்பத்துக்கு எனது அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன் என்று பிரதமர் தனது டுவிட்டர் பதிவில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## 12 வயது........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த பாடசாலையில் தரம் 7இல் கல்வி பயின்றுவந்த ராஜகிரிய கல்பொத்த பிரதேசத்தைச் சேர்ந்த மாணவியே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

குறித்த சிறுமி சுவாசக் கோளாறு காரணமாக கொழும்பு லேடி ரிஜ்வே வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது அங்கு சிறுமிக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே சிறுமி சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்-
076 443 8622
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@
gmail.com

வேலைவாய்ப்பு
சமையலுக்கு பெண்
உதவியாளர் தேவை.
தொடர்புகளுக்கு -
076 740 3814



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இது நிபுணத்துவத் தவறா?

கொஞ்சம் காலம் தாழ்த்தியேனும் இயன்ற தாராள எண்ணிக்கையில் கொவிட் தடுப்பூசிகளை நாட்டுக்குள் கொண்டு வந்து குவிக்கின்றது அரசு. சுமார் 2 கோடி 20 லட்சம் சனத்தொகை கொண்ட இலங்கையில் பன்னிரண்டு வயதுக்கு உட்பட்ட சிறாரை விட்டால் குத்துமதிப்பாக சுமார் ஒரு கோடியே 65 லட்சம் பேருக்காவது தடுப்பூசி செலுத்தப்பட வேண்டும். அவர்களுக்கு இரண்டு டோஸ் தடுப்பூசிகளை வழங்கக் குறைந்தபட்சம் மூன்றரைக் கோடி தடுப்பூசிகளாவது தேவைப்படும். தடுப்பூசி செலுத்தப்படத் தொடங்கிய காலத்திலிருந்து இப்போது அதனை சுவீகரிக்கும் வேகம் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதுவரை சுமார் ஒன்றரைக் கோடித் தடுப்பூசிகள் வந்துள்ளன. இன்று முதல் அடுத்த இரண்டு வார காலத்துக்குள் சுமார் 70 லட்சம் தடுப்பூசிகள் அணி அணியாக நாட்டுக்குள் வந்து இறங்கவிருக்கின்றன. இன்று மேலும் பத்து லட்சம் தடுப்பூசிகள் வந்து சேருகின்றன. இன்னும் மூன்று நாள்களில் – வரும் 27ஆம் திகதிக்கு முன் – மேலும் இருபது லட்சம் தடுப்பூசிகள் வரும். அடுத்த மாத முற்பகுதியில் மேலும் 40 லட்சம் தடுப்பூசிகள் வந்திறங்கும் என்பதும் உறுதி செய்யப்பட்டிருக்கின்றது.

நிதி நெருக்கடிகள், பொருளாதாரப் பின்னடைவுகள், பொது முடக்கப் பாதிப்புகள், இராஜதந்திர முரண்பாடுகள் போன்ற இன்னோரன்ன பிரச்சினைகளுக்கு மத்தியிலும் – சற்றுக் கால தாமதத்தின் காலத்தின் பின்னரும் கூட – இத்தனை எண்ணிக்கையில் தடுப்பூசிகளை சுவீகரித்து பெற்றுக்கொடுக்கும் அரசுத் தலைமை அதற்காகப் பாராட்டப்பட வேண்டியதுதான்.

ஆனால், அந்தத் தடுப்பூசிகள் சரியான முறைமையில், விதிமுறையில், ஒழுங்கில் மக்களுக்கு வழங்கப்படுவதை உறுதி செய்வதில் நமது நிபுணத்துவத்துறை செயற்றிறன் மிக்கதாக நடந்து இருக்கின்றதா என்ற கேள்வி இப்போது எழுந்திருக்கின்றது.

கிடைத்த தடுப்பூசியை மக்களுக்கு விநியோகிப்பது தொடர்பான முன்னுரிமையை தீர்மானிப்பதில் நமது நிபுணத்துவத் துறை பெரும் தவறிழைத்துள்ளது, அதனால் உயிரிழப்புகள் எகிறி உள்ளன என்ற குற்றச்சாட்டை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஸெனல் பெர்னாண்டோ முன்வைத்திருக்கிறார்.

தடுப்பூசி வந்ததும் முதலில் அறுபது வயதுக்கு மேற்பட்டோருக்கும், தொடர்ந்து 30 முதல் 60 வயதுக்கு இடைப்பட்டோருக்கும் என இரு பிரிவுகளில் தடுப்பூசி வழங்கத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.


முதல் பிரிவான வயதில் மூத்தவர்களுக்கு – அறுபது வயதுக்கு மேற்பட்ட பிரஜைகளுக்குத் தடுப்பூசி செலுத்தும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு, அது கொஞ்சம் முன்னேறுவதற்கு முன்னரே அடுத்த பிரிவினருக்குத் தடுப்பூசி செலுத்தும் திட்டத்தை மருத்துவ –சுகாதாரத் துறையினர் ஆரம்பித்துவிட்டனர். அதனால் அறுபது வயதுக்கு மேற்பட்டோருக்கு தடுப்பூசி வழங்கும் திட்டம் முழு முனைப்பில் முன்னெடுக்கப்படாமல் தூங்கி விட்டது. இப்போது அறுபது வயதுக்கு மேற்பட்டோரே கொரோனாத் தொற்றால் அதிகம் உயிரிழந்து வருகின்றனர். அப்படி உயிரிழந்தோரில் அதிக வீதத்தினர் தடுப்பூசி போடாத முதியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. முதலில் முதியவர்கள் எல்லோருக்கும் – அறுபது வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் – முதலில் தடுப்பூசி செலுத்தப்பட்டிருக்க வேண்டும். அப்படிச் செலுத்தினால் 90 வீத கொவிட் உயிரிழப்புகளைத் தடுக்க முடியும் என்று அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினரும், துறைசார் பிற நிபுணர்களும் சுட்டிக்காட்டி இருந்தனர் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஸெனல் பெர்னாண்டோ மருத்துவர் கூறுகிறார்.

இந்த நிலையில்தான் அரசின் தொற்றுநோயியல் பிரிவைச் சேர்ந்த சிலர் அவசரப்பட்டு 30 வயது முதல் 60 வயது வரை உடையவர்களுக்குத் தடுப்பூசி செலுத்தும் திட்டத்தை பரிந்துரைத்தனர். அங்குதான் அரசின் தடுப்பூசித் திட்டம் தடம் மாறியது என்று குற்றம் சுமத்துகின்றார் அவர்.

இரண்டு வயதுப் பிரிவினர்கள் மீது ஒரே சமயத்தில் கவனம் செலுத்தியமையால், வயதில் மூத்தவர்கள் விடயத்தில் எம்மால் முழுமையாக கவனம் செலுத்த முடியவில்லை. அதனால் இத்துணை உயிரிழப்புகள். இப்போது உயிரிழந்த மூத்த பிரஜைகளில் 88 வீதமானோர் முழுமையான தடுப்பூசிகளைப் பெறாதவர்கள் என்பது அதிர்ச்சி தரும் உண்மையாகும்.

இவ்வளவு நெருக்கடிகளுக்கு மத்தியில் அரசு தருவித்துக் குவிக்கும் தடுப்பூசிகள் சரியான முறையில் பகிரப்படாதமை பாதிப்பு ஏற்படுத்தும் தவறு எனில் சம்பந்தப்பட்டோர் –நிபுணர்கள் –பொறுப்புக்கூற வேண்டும்.

## இலங்கையுடனான இருதரப்பு உறவை விரிவுபடுத்த ரஷ்யா ஆர்வம் தெரிவிப்பு



இலங்கையுடனான வர்த்தகம், முதலீடு, சுற்றுலா, விஞ்ஞானம், தொழில்நுட்பம், பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகள் உள்ளிட்ட பல துறைகளில் இருதரப்பு உறவுகளை மேலும் விரிவுபடுத்துவதில் ரஷ்யா ஆர்வமாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸுடனான சந்திப்பின்போதே அந்நாட்டு தூதுவர் யூரி பி. மேட்டேரி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் நீண்ட கால நட்பு மற்றும் ரஷ்யாவுடனான பரந்த ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை சந்திப்பின்போது வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்பீரிஸ் வலியுறுத்தினார்.

பல்தரப்புக் கோட்பாடுகளில் கொள்கை மற்றும் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக இலங்கைக்கு ரஷ்யா வழங்கிய ஆதரவுகளுக்காக நன்றிகளையும் தெரிவித்தார்.

வர்த்தகம், முதலீடு, சுற்றுலா, விஞ்ஞானம், தொழில்நுட்பம், பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகள் உள்ளிட்ட பல துறைகளில் இருதரப்பு உறவுகளை மேலும் விரிவுபடுத்துவதில் ரஷ்யா ஆர்வமாக உள்ளதாக இதன்போது அந்நாட்டுத் தூதுவர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பு, வர்த்தகம், பொருளாதாரம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு மற்றும் 2022ஆம் ஆண்டு இலங்கை - ரஷ்யா இராஜதந்திர உறவுகளின் 65 ஆவது ஆண்டு நிறைவை நினைவு கூருதல் ஆகிய விடயங்கள் தொடர்பாகவும் அவதானம் செலுத்தப்பட்டன.

கொவிட்-19 தொற்று நோயால் இன்று மனிதகுலம் எதிர்கொள்ளுகின்ற பொதுவான சவால்களுக்கு பகிரப்பட்ட தீர்வுகளைப் பின்பற்றுவதன் முக்கியத்துவம் பற்றியும் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## நாட்டை முடக்கியதன் பெறுபேற்றை இரண்டு வாரங்களிலேயே காணலாம்

### வைத்தியர் அர்ஜூனத சில்வா தெரிவிப்பு



தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்திய சில தினங்களிலேயே கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை ஒரே தடவையாக குறைவடையவில்லை என யாரும் சங்கடப்படவோ மனதளவில் பாதிக்கப்படவோ தேவையில்லை.

நாட்டை முடக்கியதன் பிரதிபலனை கண்டுகொள்வதற்கு குறைந்த பட்சம் இரண்டு வாரங்களாவது செல்லும் என றாகம வைத்திய பீடத்தின் சிரேஷ்ட பேராசிரியர் அர்ஜூனத சில்வா தெரிவித்தார்.

அத்துடன் கொவிட் தடுப்பூசியை தெரிவு செய்துகொண்டிருக்காமல் முதலில் கிடைக்கும் தடுப்பூசி சிறந்த தடுப்பூசி என நினைத்து பெற்றுக்கொள்ளவேண்டும் எனவும் தெரிவித்தார்.

கொவிட்டைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நாடு முடக்கப்பட்டுள்ளபோதும் கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடையவில்லை எனப் பலரும் தெரிவித்து வரும் கருத்து தொடர்பில் குறிப்பிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## டுபாயில் விபத்துக்குள்ளான பணிப்பெண்ணுக்கு 5 கோடியே 40 லட்சம் ரூபா இழப்பீடு கிடைத்தது



டுபாயில் உள்ள இலங்கை பணிப் பெண்ணுக்கு கடந்த ஆண்டு ஏற்பட்ட வீதி விபத்தைத் தொடர்ந்து டுபாய் நீதிமன்றத்தால் 10 லட்சம் திர்ஹம் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. இது இலங்கை மதிப்பில் 5 கோடியே 40 லட்சம் ரூபாவாகும்.

கடந்த ஆண்டு மே மாதம் 24 ஆம் திகதி, டுபாயில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கு அருகில் இருந்த பாதசாரிகள் கடவையிலேயே இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

45 வயதுடைய பாடசாலைக்குச் செல்லும் இரு குழந்தைகளின் தாயான தரங்கா தில்ருக்ஷி விபத்தின் காரணமாக சக்கர நாற்காலியில் இருக்கும் நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

அவரது காயங்களுக்கு இழப்பீடு கோரி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில் ஒரு வருட கால போராட்டத்துக்குப் பிறகு, இலங்கை மதிப்பில் சுமார் 5.4 கோடி ரூபா இழப்பீட்டை குறித்த இலங் கைப் பணிப்பெண் சாதகமாகப் பெற்றுள் ளார் என குல்ட் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தப் பெண் அளித்துள்ள பேட்டியில் -

'நான் வீதியைக் கடக்கும்போது ஓர் இந்தியர் செலுத்திய கார் என்னை மோதியது. சாரதிக்கு எதிராக அந்நாட்டு போக்குவரத்து நீதிமன்றம் அவருக்கு 5,000 திர்ஹம் அபராதம் விதித்தது.' எனக் கூறியுள்ளார்.

வை.ஏ.பி. சட்டக் குழுவின் சட்டப் பிரதிநிதியான சலாம் பாப்பினிசேரியின் ஆலோசனையின் படி, தில்ருக்ஷி டுபாய் நீதிமன்றத்தில் சிவில் வழக்கொன்றைத் தாக்கல் செய்தார். அந்த வழக்கு விபத்திற்குள்ளாக்கிய கார் செலுத்துனருக்கு எதிராக இருந்தது.

வழக்கறிஞர் யூனுஸ் முகமது அல் ப்ளூஷி, வழக்கறிஞர் முகமது இப்ராஹிம் அல் சுவைதி மற்றும் வழக்கறிஞர் ருக்கியா அல் ஹஷிமி ஆகியோர் மருத்துவ அறிக்கை, தடயவியல் அறிக்கை மற்றும் பிற தொடர்புடைய ஆவணங்கள் உட்பட வலுவான ஆதாரங்களுடன் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர். டுபாய் நீதிமன்றம், வழக்கறிஞர்களால் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களைச் சரிபார்த்து இரு தரப்பு வாதங்களையும் கேட்ட பின்னர் இறுதியாக தில்ருக்ஷிக்கு ஆதரவாக, 10 லட்சம் திர்ஹம் இழப்பீடாக வழங்கியது.

இதையடுத்து இழப்பீடைப்பெற்றுள்ள தில்ருக்ஷி தற்போது மீண்டும் இலங்கைக்குத் திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## இயற்கை அழிவுகளுக்கு மனிதர்களே காரணம்!

ஐரோப்பாவில் கடந்த மாதம் ஏற்பட்ட பெருமழை, வெள்ளம், அதனாலுண்டான பேரழிவுகள் அனைத்துக்கும் பருவநிலை மாற்றமே காரணம் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். ஐரோப்பியப் பிராந்தியத்தில், மனிதர்களால் தூண்டப்பட்ட பருவநிலை மாற்றத்தின் காரணமாகவே கோடையில் ஒரு நாள் மழை 3சத வீதம் முதல் 19சதவீதம் வரை அதிகரித்துள்ளது என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பருவ நிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைக்க பசுமை இல்ல வாயு உமிழ்வை விரைவாகக் குறைக்க வேண்டும். அவசர எச்சரிக்கை மற்றும் முகாமைத்துவ அமைப்புகளை மேம்படுத்த வேண்டும். மேலும் பருவநிலைக்குத் தக்கபடி உள்கட்டமைப்புகளை மாற்றியமைக்க வேண்டும். அதன் மூலமே தீவிரமான இயற்கைப் பேரிடர்களைத் தாங்கி, உயிரிழப்புகள் மற்றும் சேதங்களைக் குறைக்க முடியும் எனவும் விஞ்ஞானிகள் பரிந்துரைத்துள்ளனர்.

ஜேர்மனி, பெல்ஜியம் உள்ளிட்ட நாடுகளில் கடந்த மாதம் பெரு வெள்ளம் ஏற்பட்டு நகரங்கள் மற்றும் கிராமங்கள் மூழ்கியமையால் குறைந்தது 220 பேர் இறந்தனர். இந்த வெள்ளத்தில் பலர் அடித்துச் செல்லப்பட்டனர். வீடுகள், வீதிகள் மற்றும் ரயில் பாதைகள் போன்றவை வெள்ள நீரால் உருக்குலைந்தன.

இது போன்ற நிகழ்வுகளின்போது பருவநிலை மாற்றத்தின் தாக்கம் குறித்து ஆய்வு செய்வதற்கு, உலக வானிலைபண்டுக்குழுவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் வெள்ளத்துக்கு முந்தைய கனமழை குறித்து கவனம் செலுத்தினர். தற்போதைய பருவநிலையின் அடிப்படையில் பார்த்தால், மேற்கு ஐரோப்பாவில் எந்த ஒரு இடத்திற்கும், ஜூலை மாதத்தில் பெய்ததைப் போன்ற பயங்கர மழை 400 வருடங்களுக்கு ஒரு முறை பெய்யும் என எதிர்பார்க்கப்படுவதாக இந்த ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

தொடர்ச்சியான பசுமை இல்ல வாயு உமிழ்வு மற்றும் வெப்பநிலை உயர்வால், ஐரோப்பாவின் சில பகுதிகளில் அதிக பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலான கனமழை மிக வழக்கமான நிகழ்வாக மாறிவிடும் எனவும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

# ஆப்கானுக்கு நாம் ஆதரவு உறுதிபடச் சொல்கிறது சீனா




ஆப்கானிஸ்தான் மக்களின் அமைதி மற்றும் முன்னேற்றத்துக்காகத் தொடர்ந்து ஆதரவு வழங்குவோம் என்று சீனா உறுதியளித்துள்ளது. இது குறித்து சீன வெளியுறவு அமைச்சகச் செய்தித் தொடர்பாளர் வாங் வென்பின் கருத்துத் தெரிவிக்கையில், 'ஆப்கான் விவகாரத்துக்கு மூலகாரணி அமெரிக்காதான். ஆப்கானின் மறுகட்டமைப்புக்கு எதுவும் செய்யாமல் அமெரிக்கா அதைக் கைவிட்டுவிட முடியாது. ஒட்டுமொத்த ஆப்கான் மக்களுக்கும் நட்புறவான கொள்கையையே சீனா பின்பற்றுகிறது. அந்நாட்டின் சமூக பொருளாதார மேம்பாட்டுக்காக கணிசமான உதவிகளை வழங்கிவருகிறது. அந்நாட்டில் ஏற்பட்டுள்ள குழப்பம் விரைவில் முடிவுக்கு வரும் என நம்புகிறோம். அந்நாட்டு மக்களின் அமைதி, முன்னேற்றத்துக்காக சாதகமான பங்களிப்பை சீனா தொடர்ந்து வழங்கும். ஆப்கான் விவகாரத்தில் சீனாவின் நிலைப்பாடு நிலையானது மற்றும் தெளிவானது. வெளிநாடு மற்றும் உள்நாட்டுக் கொள்கையை ஏற்றுக்கொள்ளும் திறந்த, பரந்த அடிப்படையிலான அரசை ஆப்கானால் ஏற்படுத்த முடியும் என நம்புகிறோம்.

ஆப்கானில் உள்ள சீனர்கள் பெரும்பாலானோர் நாடு திரும்பிவிட்டனர். அங்குள்ள எங்களது தூதரகம் எப்போதும்போல செயற்பட்டு வருகிறது. அந்நாட்டில் எஞ்சியுள்ள சீனர்களின் பாதுகாப்பு குறித்து தொடர்ந்து கண்காணித்து வருகிறோம்' என்றார்.

# தலிபான்களுக்குத் தடை; ஆராய்கிறது கனடா அரசு!



தலிபான்கள் மீது தடை விதிப்பது குறித்துப் பரிசீலித்து வருகிறோம் என்று கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார். காணொலி மூலம் நடைபெற்ற ஜி-7 நாடுகளின் தலைவர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துக்கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில், 'ஆப்கானிஸ்தானை தற்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ள தலிபான்கள் குழு தீவிரவாதக் குழு என்பதில் ஐயமில்லை. கனடா எப்போதோ தலிபான்களை தீவிரவாதிகளாக அறிவித்துவிட்டது. அவர்கள் தீவிரவாதத்தை ஊக்குவிக்கின்றனர். அதனால் அவர்கள் மீது பல்வேறு தடைகளை விதிப்பது குறித்து நிச்சயமாக பரிசீலிக்கலாம்' எனக் கூறினார்.

ஜி-7 மாநாட்டை ஒருங்கிணைக்கும் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள பிரித்தானியாவும், 'தலிபான்கள் மீது உலக நாடுகள் ஏற்கெனவே பல்வேறு தடைகளை விதித்துள்ளன. அதை விலக்குவதா வேண்டாமா என்பது குறித்து தலிபான்களின் போக்கை வைத்தே கணிக்க முடியும்' என்று கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஒகஸ்ட் மாதம் முடிந்த பின்னர் அமெரிக்கர்கள் வெளியேற முடியாது

## தலிபான்கள் அதிரடி அறிவிப்பு



ஒகஸ்ட் மாதம் 31ஆம் திகதிக்குப் பின்னர் அமெரிக்கா தனது குடிமக்களை வெளியேற்ற அனுமதிக்க முடியாது எனத் தலிபான்கள் அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து இரவு பகலாக அமெரிக்கா ஆயிரக்கணக்கானோரை ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேற்றி வருகிறது. அதன்படி, கடந்த 24 மணி நேரத்தில் காபூல் விமான நிலையத்தில் இருந்து இயக்கப்பட்ட 30இற்கும் மேற்பட்ட வானூர்திகளில் சுமார் 16 ஆயிரம் பேர் வெளியேற்றப்பட்டனர் என பென்டகன் அறிவித்துள்ளது.

அமெரிக்க விமானங்களில் 10 ஆயிரத்து 400 பேரும் அதன் 61 நட்பு நாட்டு விமானங்கள் மூலம் 5 ஆயிரத்து 900 பேரும் காபூலை விட்டு வெளியேறினர். மேலும் பல ஆயிரம் பேர்களை வெளியேற்றுவதற்கான நடவடிக்கையில் அமெரிக்க விமானங்கள் ஈடுபட்டு வருகின்றன. எவ்வாறிருப்பினும் 31ஆம் திகதிக்குள் அனைவரையும் வெளியேற்றிவிடுவோம் என ஜோ பைடன் அரசு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜேர்மனியில் 37 லட்சம் பேர் மீண்டனர்

ஜேர்மனியில் கொரோனா வைரஸ் (கொவிட்-19) பெருந்தொற்றிலிருந்து 37 லட்சத்துக்கும் மேற்பட்டோர் மீண்டுள்ளனர். உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்களின் படி, ஜேர்மனியில் 37 லட்சத்து இரண்டாயிரத்து 100பேர் குணமடைந்துள்ளனர். உலகளவில் கொவிட் தொற்றினால் அதிக பாதிப்பினை எதிர்கொண்ட 14ஆவது நாடாக விளங்கும் ஜேர்மனியில் இதுவரை 38 லட்சத்து 81ஆயிரத்து 579பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 92ஆயிரத்து 497பேர் உயிரிழந்துள்ளனர். கடந்த 24 மணித்தியாலத்தில் மட்டும் வைரஸ் தொற்றினால், ஐந்தாயிரத்து 555பேர் பாதிக்கப்பட்டதோடு 19பேர் உயிரிழந்துள்ளனர். தற்போதுவரை வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்ட 86ஆயிரத்து 982பேர் அங்குள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் 775பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இலங்கை அகதிகள் குறித்து உணர்ச்சிபூர்வமாக முடிவெடுக்க முடியாது இந்திய மத்திய அரசு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் தெரிவிப்பு



திருச்சி கொட்டப்பட்டு இலங்கை அகதிகள் முகாமில் உள்ளவர்களுக்கு இந்திய குடியுரிமை வழங்கும் விவகாரத்தில், இலங்கை அகதிகள் சட்டவிரோதமாகக் குடியேறியவர்கள். எனவே, அவர்களுக்கு குடியுரிமைவழங்கும்விடயத்தில்உணர்ச்சிபூர்வமாக முடிவெடுக்க முடியாது. சட்டத்திற்குட்பட்டே முடிவெடுக்க முடியும் என இந்திய மத்திய அரசு வழக்கறிஞர் நீதிமன்றில் தெரிவித்திருக்கிறார்.

திருச்சி கொட்டப்பட்டு இலங்கை அகதிகள் முகாமில் உள்ளவர்களுக்கு இந்திய குடியுரிமை வழங்குவது குறித்து முடிவெடுக்குமாறு தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவை எதிர்த்து இந்திய மத்திய அரசு சார்பில் மேல்முறையீட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

திருச்சி கொட்டப்பட்டு இலங்கை அகதிகள் முகாமைச் சேர்ந்த பலர், தங்களுக்கு இந்திய குடியுரிமை வழங்க உத்தரவிட வேண்டும் என கடந்த 2009 ஆம் ஆண்டு உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் வழக்குத் தொடர்ந்தனர். இந்த வழக்கை விசாரித்த தனி நீதிபதி, கடந்த 2019 ஆம் ஆண்டு, மனுதாரர்கள் அனைவரும் குடியுரிமை கோரி திருச்சி மாவட்ட ஆட்சியரிடம் புதிதாக விண்ணப்பிக்கவும், அந்த விண்ணப்பங்களை திருச்சி மாவட்ட ஆட்சியர் இந்திய மத்திய அரசுக்கு தாமதமின்றி அனுப்பி, உரிய நடவடிக்கை எடுக்கவும் வேண்டுமென உத்தரவிட்டார்.

உத்தரவை முறையாக நிறைவேற்றாத அதிகாரிகள் மீது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை கோரி நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு, அது நிலுவையில் உள்ளது. இந்த வழக்கு ஏற்கனவே விசாரணைக்கு வந்தபொழுது தமிழக அரசு மற்றும் எதிர் மனுதாரராக இருக்கும் இலங்கை அகதிகளுக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிடப்பட்டிருந்தது. இந்த வழக்கு நேற்று, தலைமை நீதிபதி சஞ்சீப் பானர்ஜி மற்றும் நீதிபதி துரைச்சாமி அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அப்போது இந்திய மத்திய அரசுத்தரப்பில், இலங்கை அகதிகள் சட்டவிரோதமாக குடியேறியவர்கள், எனவே அவர்களுக்கு குடியுரிமை வழங்கும் விடயத்தில் உணர்ச்சிபூர்வமாக முடிவெடுக்க முடியாது. சட்டத்திற்குட்பட்டே முடிவெடுக்க முடியும் என தெரிவிக்கப்பட்டது.

அப்போது நீதிபதிகள், தமிழக அரசு மற்றும்எதிர்மனுதாரராகஇருக்கும்இலங்கை அகதிகளுக்கு அனுப்பிய நோட்டீஸ்கள் சரியாகச் சென்று சேரவில்லை. எனவே, தமிழக அரசு மற்றும் எதிர் மனுதாரராக இருக்கும் இலங்கை அகதிகளுக்கு புதிதாக நோட்டீஸ்களை அனுப்புவதில் மனு தாக்கல் செய்ய உத்தரவிடுகிறோம் எனக்கூறி, வழக்கை மூன்று வாரங்களுக்கு ஒத்திவைத்தனர்.

## ஆப்கானிஸ்தான் விவகாரம் குறித்து கலந்துரையாட அனைத்துக்கட்சி கூட்டத்திற்கு இந்திய அரசு ஏற்பாடு



ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றியதையடுத்து அந்நாட்டில் உள்ள இந்தியர்களை இந்திய அரசு நாட்டுக்குத் திரும்ப அழைத்துவருகிறது. அதன்படி, கடந்த சில நாள்களாக எயார் இந்தியா மற்றும் விமானப்படை விமானங்கள் காபூல் விமான நிலையத்தில் இருந்து நூற்றுக்கணக்கான இந்தியர்களை சொந்தநாட்டுக்கு கொண்டு வந்து சேர்த்துள்ளன.

இந்த நிலையில், ஆப்கானிஸ்தான் விவகாரம் குறித்து விவாதிக்க வரும் 26 ஆம் திகதி அனைத்துக்கட்சிக் கூட்டம் நடைபெறவுள்ளதாகவும், ஆப்கானிஸ்தான் விவகாரம் குறித்து எதிர்க்கட்சிகளுக்கு விளக்கம் அளிக்க வெளியுறவுத்துறை அமைச்சகத்திற்கு இந்தியப் பிரதமர் மோடி அறிவுறுத்தியுள்ளார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதுதொடர்பாக இந்திய மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் நேற்று தனது டுவிட்டர் பதிவில், ஆப்கானிஸ்தான் விவகாரம் தொடர்பாக மக்களவை மற்றும் மாநிலங்களவையில் உள்ள அரசியல் கட்சிகளின் தலைவர்களை அழைத்து விளக்கம் அளிக்க வெளியுறவுத்துறை அமைச்சகத்திற்கு பிரதமர் மோடி அறிவுறுத்தியுள்ளார். நாடாளுமன்ற விவகாரங்களுக்கான மத்திய அமைச்சர் பர்ஹட் ஜோஷி இது தொடர்பான கூடுதல் விவரங்களை விரைவில் வெளியிடுவார் என தெரிவித்துள்ளார்.

## டெல்லியில் இரண்டாவது நாளாகவும் ஆப்கானிஸ்தான் அகதிகள் போராட்டம்

இந்தியத் தலைநகர் டெல்லியில் ஐ.நா. அகதிகள் ஆணைய அலுவலகம் முன்பு ஆப்கானிஸ்தான் அகதிகள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்றுமுதல் போராட்டம் நடத்திவருகின்றனர்.




ஆப்கானிஸ்தானில் ஆட்சியை தலிபான்கள் கைப்பற்றியதையடுத்து அந்த நாட்டில் இருந்து ஆயிரக்கணக்கானோர் அகதிகளாக வெளியேறி வருகின்றனர். இந்த நிலையில் ஆப்கான் மக்களுக்கு அகதிகள் அடையாள அட்டை வழங்க வேண்டும் என்றும், மூன்றாவது நாட்டில் குடியமர்த்துதலுக்கு அனுமதி மற்றும் பாதுகாப்பை அளிக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்தே அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.



## நேற்றுமுதல் மீண்டும் திறக்கப்பட்டன கொடைக்கானல் சுற்றுலாத் தலங்கள்

கொடைக்கானலில் நான்கு மாதங்களுக்குப்பிறகு பூங்காக்கள், படகு இல்லங்கள் உள்ளிட்ட சுற்றுலாத் தலங்கள் நேற்று திறக்கப்பட்டன.

கொரோனா நோய்ப்பரவலைக் கட்டுப்படுத்த தமிழக அரசு கடும் கட்டுப்பாடுகளை விதித்திருந்தது. கொடைக்கானல், ஊட்டி, ஏற்காடு உள்ளிட்ட சுற்றுலாத் தலங்களுக்குச் செல்ல தடை விதிக்கப்பட்டிருந்தது. கடந்த ஏப்ரல் மாதம் முதல் கொடைக்கானலுக்குச் செல்ல பொதுமக்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

கொரோனாத் தொற்றுப் பரவல் குறைந்த காரணத்தால் கட்டுப்பாடுகளில் பல தளர்வுகள் அறிவிக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து ஜூன் மாதம் சாலைப் போக்குவரத்து அனுமதிக்கப்பட்ட நிலையில், மலைப்பகுதியின் குளிர்ச்சியை அனுபவிக்க சுற்றுலாப் பயணிகள் அங்கே செல்ல ஆரம்பித்திருந்தனர். ஆயினும், அதிகமானவர்கள் கூடும் இடங்களுக்குச் செல்ல தடை நீடித்திருந்தது. இந்த நிலையில் நேற்று முதல் மேலும் பல தளர்வுகள் அறிவிக்கப்பட்ட நிலையில், கொடைக்கானல் நட்சத்திர ஏரியில் படகுச் சவாரி செய்யவும், பூங்காக்களில்ஓய்வெடுத்து குழந்தைகளை மகிழ்விக்கவும், பசுமைப் பள்ளத்தாக்கு மற்றும் கோக்கர்ஸ் பள்ளத்தாக்குப் பகுதிகளைப் பார்வையிடவும் சுற்றுலாப் பயணிகள் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். இதனால், சுற்றுலா வரும் பயணிகளை நம்பி தொழில் செய்பவர்கள் தங்களது வாழ்வாதாரத்தை மீட்டெடுக்கும் நம்பிக்கை துளிர்த்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

## மறைந்த முதலமைச்சர் கருணாநிதிக்கு மெரினாவில் நினைவிடம்



*கடந்த 2018 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 7 ஆம் திகதி உடல்நலக்குறைவால் கலைஞர் மு.கருணாநிதி காலமானார். தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சராகவும், 60 ஆண்டுகள் சட்டமன்ற உறுப்பினராகவும், 50 ஆண்டுகள் தி.மு.க. தலைவராகவும் இருந்த கருணாநிதிக்கு நினைவிடம் அமைக்கப்படும் என முதலமைச்சர் ஸ்டாலின் சட்டப்பேரவையில் 110 ஆவது விதியின் கீழ் அறிவித்துள்ளார்.*

*சென்னை மெரினா கடற்கரையில் ரூபா 39 கோடியில் 2.23 ஏக்கரில் கலைஞர் மு.கருணாநிதிக்கு நினைவிடம் கட்டப்படும் எனவும் கருணாநிதியின் வாழ்க்கை, சிந்தனைகள் குறித்த நவீன ஒளிப்படங்களும் அந்த நினைவிடத்தில் அமையும் என்றும் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.*

# வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு 3.9 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது



மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா ஊரடங்கினால் பாதிக்கப்பட்ட வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு 3.9 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தற்போது தொழில் பாதிப்பிற்கு உள்ளான 64,382 குடும்பங்களுக்கு 2,000 ரூபா வழங்குவதற்கு என 3.9 கோடி ரூபா நிதியினை அரசு ஒதுக்கியுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் குறிப்பிட்டார்.

பிரதேசசெயலகங்களில் தற்போது நிவாரண வேலைகளுக்கான பணிக்குழுவினர் வேகமாக செயற்பட்டுவருகின்றனர் எனவும் அதேவேளை மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் இதுவரை 52 கொரோனா நோயாளிகள் அடையாளம் காணப்பட்ட நிலையிலும் மக்களுக்கான நிவாரண பணிகள் தடையின்றி முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் அரசாங்க அதிபர் குறிப்பிட்டார்.

கடந்த காலங்களைவிட தற்போது கொரோனாத் தொற்று தாக்கம் அதிகரித்து வருகின்ற நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைமுறைக்கு கொண்டுவந்துள்ள ஊரடங்கு எதிர்வரும் 30ஆம் திகதி வரையும் நடைமுறையில் இருக்கும் காலங்களில் மக்களின் அனாவசியமான நடமாட்டங்கள் அதிகரித்துள்ளன என அவதானிக்க முடிகின்றது.

இதனை மக்கள் உடனடியாக நிறுத்துமாறும் அல்லாத பட்சத்தில் சட்டநடவடிக்கைக்கு உள்ளாக்கப்படவுள்ளனர் எனவும் இதனை கண்காணிப்பதற்காக பொலிஸ் இராணுவத்தினர் கண்காணிப்பு பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர் எனவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.




# மட்டக்களப்பில் கைத்துப்பாக்கி மீட்பு

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காங்கேயனோடை பகுதியில் கைத்துப்பாக்கி உட்பட இரண்டு மகசின்களையும் களுவாஞ்சிகுடி விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் கைப்பற்றியுள்ளனர்.

காங்கேயனோடையில் உள்ள வெற்றுக் காணியொன்றில் குறித்த துப்பாக்கியை வீசி விட்டுச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படும் நிலையில் கைப்பற்றப்பட்ட துப்பாக்கி மற்றும் மகசின்கள் காத்தான்குடி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# மஜ்மா நகர் கிராமத்தில் யானைகள் தொல்லை

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மஜ்மா நகர் கிராமத்தில் இரவு வேளைகளில் யானைகளின் அட்டகாசத்தால் சொத்துக்கள் சேதமாக்கப்படுகின்றன என பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மஜ்மாநகர் கிராமத்தில் வாழும் மக்கள் தங்களது காணியில் பயன்தரும் மரங்கள் மற்றும் மரக்கறி தோட்டங்கள் அமைத்து பராமரித்து வரும் நிலையில் இரவு வேளைகளில் வரும் யானைகள் இவற்றை சேதப்படுத்தி செல்லும் நிலைமை காணப்பட்டு வருகின்றது.

மஜ்மாநகர் கிராமத்திற்கு வருகை தந்த யானைகள் மூன்று நபர்களின் வீட்டுத் தோட்டத்தில் காணப்பட்ட தென்னை மரங்கள், மா மரங்கள், மரவள்ளி தோட்டம், தண்ணீர் குழாய் மற்றும் வேலிகளை துவசம்சம் செய்து சென்றுள்ளன.

இம்மாதம் மாத்திரம் மஜ்மாநகர் கிராமத்திற்கு இரவு வேளையில் யானைகள் இரண்டு தடவைகள் வருகை தந்து பயிர்களை துவம்சம் செய்து வீட்டு உபகரணங்களையும் சேதப்படுத்தி சென்றுள்ளன என பாதிக்கப்பட்டவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மஜ்மாநகர் பகுதி மக்கள் அச்சமின்றி வாழ்வதற்கும், பயிர்களை யானைகள் துவம்சம் செய்யாது தமது பகுதியை சுற்றி யானை வேலி அமைத்து தருமாறு பாதிக்கப்பட்ட மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# மஜ்மா நகர் மயானத்தில் 2,000 சடலங்கள் அடக்கம்

கொரோனாத் தொற்றினால் மரணமடைந்தவர்களை அடக்கம் செய்யும் ஓட்டமாவடி - மஜ்மா நகர் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்ட உடல்களின் எண்ணிக்கை இரண்டாயிரத்தைத் தாண்டியுள்ளதாக அப்பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம்.நௌபர் தெரிவித்தார்.

22 ஆம் திகதி அடக்கம் செய்யப்பட்ட 48 உடல்களுடன் இதுவரை மொத்தமாக 2,018 உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன எனவும், தற்போது நாளொன்றுக்கு 30 தொடக்கம் 50 வரையான சடலங்கள் நல்லடக்கத்துக்கு வருகின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த 20 ஆம் திகதி மாத்திரம் 53 உடல்கள் அங்கு நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன எனவும், இதுவே ஒரே நாளில் அதிகூடிய உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட நாளாகவும் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காரைதீவு கரடித்தோட்டம் சமுர்த்தி காரியாலயம் பூட்டு

கரடித்தோட்டம் சமுர்த்தி காரியாலயமுகாமையாளருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் சமுர்த்தி உத்தியோகஸ்தர்கள் அனைவருக்கும் அன்டிஜன் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

பரிசோதனைகளின் போது மேலும் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார் என காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய வைத்தியர் தஸ்லிமா பஸீர் தெரிவித்தார். இந்நிலையில் காரைதீவு கரடித்தோட்டம் சமுர்த்தி காரியாலயம் மூடப்பட்டுள்ளதுடன் குறித்த நிலையத்தினூடான அனைத்து சேவைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்டம் கல்முனைப் பிராந்தியத்தில் நேற்று 105 தொற்றாளர்கள் இனம்காணப்பட்டமையுடன் மூன்று மரணங்கள் பதிவு செய்யப்பட்ட நிலையில் காரைதீவு பிரதேசத்தில் நேற்று 10 தொற்றாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர் என கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் குணசிங்கம் சுகுணனால் நேற்று மாலை வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த மூதூரில் நேற்றுக் கலந்துரையாடல்

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கொரோனா பரவுதலைக் கட்டுப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம்.முபாரக் தலைமையில் மூதூர் பிரதேச கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன் போது கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தலுக்கான துரித நடவடிக்கைகள் தொடர்பாகவும் மூதூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நிலவுகின்ற வாகனப் பிரச்சினையை தற்காலிகமாக நிவர்த்திக்கும் வகையில் வாகன ஏற்பாடும் செய்யப்பட்டதோடு, மூதூர் பிரதேச மக்களின் பாதுகாப்பு தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவான் அத்துகொரல, திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகொரல, நாடாளுமன்ற உறுப்பினரின் மூதூருக்கான இணைப்பாளர் எம்.ஏ.எம். முபாரக் ஆகியோருடன் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.எம்.காஸ்ஸாலி, பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர், நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டார்கள்.



காலைக்கதிர் மாலைப்பதிப்பு Kalaikkathir







# டோக்கியோ பாரா ஒலிம்பிக் போட்டிகள் கொரோனா அச்சத்துக்கிடையில் ஆரம்பம்

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் பாரா ஒலிம்பிக் விளையாட்டுப்போட்டிகள் இன்று ஆரம்பமாகியுள்ளன. 2020 ஆம் ஆண்டே பாரா ஒலிம்பிக் நடைபெறுவதாக இருந்தபோதிலும் கொரோனாப் பாதிப்பு காரணமாக ஓராண்டுக்கு அது ஒத்தி வைக்கப்பட்டது. இன்று தொடங்கி வரும் செப்டெம்பர் 5 ஆம் திகதி வரை நடைபெறும் பாரா ஒலிம்பிக் போட்டிகளில் 163 நாடுகளைச் சேர்ந்த 4,500 வீரர், வீராங்கனைகள் கலந்து கொள்கின்றனர்.

22 விளையாட்டுக்களில் மொத்தமாக 537 போட்டிகள் நடைபெறவுள்ளன. பட்மின்டனும் டக்வொன்டோ எனப்படும் தற்காப்புக் கலைப் போட்டியும் இம்முறை பாரா ஒலிம்பிக்கில் புதிதாக இணைக்கப்பட்டுள்ளன.

டோக்கியோ ஒலிம்பிக் போன்றே பாரா ஒலிம்பிக்கிலும் ரசிகர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. ஜப்பானில் கொரோனா பாதிப்பு நாளுக்கு நாள் எகிறி வருவது போட்டி அமைப்பாளர்களைக் கவலையடையச் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. நேற்று முன்தினம் பாதிப்பு எண்ணிக்கை இருபத்தைந்தாயிரத்தைத் தாண்டியுள்ளது. இதில் டோக்கியோவில்மட்டும்5,074பேர்தொற்றுக்குள்ளாகியுள்ளனர். இதுவரை 131 பாரா ஒலிம்பிக்கோடு தொடர்புடையவர்கள்கொரோனாவால்பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதும் கவனிக்கத்தக்கது. பாரா ஒலிம்பிக் போட்டிகளை நேரடியாகப் பார்ப்பதற்கு அரங்குகளுக்குள் பத்தாயிரம் பாடசாலை மாணவர்களை அனுமதிக்கத் திட்ட மிட்டுள்ளதாக டோக்கியோ ஆளுநர் யூரிகோ கோய்கே தெரிவித்துள்ளமை விவாதங்களுக்குள்ளாகியிருக்கிறது.



இந்திய அணிக்கெதிரான 3ஆவது டெஸ்ட்டில்

# இங்கிலாந்தின் மார்க் வுட் நாளை விளையாடமாட்டார்

இந்திய கிரிக்கெட் அணி, இங்கிலாந்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது.

இந்தத் தொடரின் மூன்றாவது போட்டி நாளை லீட்ஸ் மைதானத்தில் ஆரம்பமாகவுள்ள நிலையில், தோள்பட்டை காயம் காரணமாக இங்கிலாந்து அணியின் பந்துவீச்சாளர் மார்க் வுட் இந்தப் போட்டியிலிருந்து விலகியுள்ளார்.

இரண்டாவது டெஸ்ட் போட்டியில் களத்தடுப்பில் ஈடுபட்டிருந்தபோது அவருக்குக் காயம் ஏற்பட்டது. பந்து வீசுமளவுக்கு அவர் இன்னமும் காயத்திலிருந்து குணமடையாத காரணத்தினால் இந்தப் போட்டியில் அவருக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளது.

அவர் தொடர்ந்து அணியுடன் பயணிப்பார். அவரை அணியின் மருத்துவர்கள் பரிசோதித்து வருகின்றனர். லீட்ஸ் டெஸ்டின் முடிவின்போது மீண்டும் அவரது உடல் திறன் பரிசோதிக்கப்படும் என இங்கிலாந்து கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்டுவர்ட் ப்ரோட், க்றிஸ் வோக்ஸ், ஒலி ஸ்டோன், ஜோஃப்ரா ஆர்ச்சர் போன்ற பந்துவீச்சாளர்களும் காயம் காரணமாக அணியில் இல்லாத நிலையில், மார்க் வுட்டும் விளையாடாதது இங்கிலாந்து அணிக்குப் பின்னடைவாகக் கருதப்படுகிறது.

லோர்ட்ஸ் டெஸ்டில் மார்க் வுட் தனது பந்துவீச்சின் மூலம் இங்கிலாந்து அணிக்கு வெற்றிக்கான நம்பிக்கையை ஏற்படுத்தியிருந்தார்.

ரோகித் சர்மா, கே.எல்.ராகுல், புஜாரா என இந்தியாவின் மூன்று முன்னணி துடுப்பாட்டக்காரர்களை அவர் இரண்டாவது இன்னிங்ஸில் ஆட்டமிழக்கச் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தான் – தீவுகள் டெஸ்ட் இறுதிநாள் ஆட்டம் இன்று

மேற்கிந்தியத் தீவுகள் - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் நான்காம் நாள் ஆட்ட நிறைவில் தனது இரண்டாவது இன்னிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடி வரும் மேற்கிந்தியத் தீவுகள் அணி ஒரு விக்கெட்டை இழந்து 49 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஆட்டநேர முடிவில் கிரேய்க் பிரத்வைட் 17 ஓட்டங்களுடனும் அல்சாரி ஜோசப்8ஓட்டங்களுடனும்ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

ஜமைக்காவில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமான இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, ஒன்பது விக்கெட்டுகளை இழந்து 302 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது தனது முதல் இன்னிங்ஸ் ஆட்டத்தை இடைநிறுத்திக்கொண்டது.

இதனைத்தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்ஸை விளையாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 150 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்து சுருண்டது. போனர் 37 ஓட்டங்களையும் பிளக்வுட் 33 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். பாகிஸ்தான் அணியின் ஷாயின் ஷா அப்ரிடி 6 விக்கெட்டுகளையும் மொஹமட் அப்பாஸ் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனையடுத்து 152 ஓட்டங்கள் முன்னிலை பெற்று தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான் அணி, 6 விக்கெட்டுகளை இழந்து 176 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது தனது இரண்டாவது இன்னிங்ஸ் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டு, மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு 329 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நிர்ணயித்தது. இம்ரான் பட் 37 ஓட்டங்களையும் பாபர் அசாம் 33 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் ஜேஸன் ஹோல்டர் மற்றும் அல்சாரி ஜோசப் இருவரும் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர். இதன் பின்னர் 329 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கிக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, நேற்றைய நான்காம் நாள் ஆட்டநேர முடிவில் ஒரு விக்கெட்டை இழந்து 49 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இன்றைய இறுதிநாளில் 9 விக்கெட்டுகள் கைவசமுள்ள நிலையில் போட்டியின் இறுதி நாளான இன்று, மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றிக்கு 280 ஓட்டங்கள் தேவை என்ற இலக்கோடு துடுப்பெடுத்தாடவுள்ளது. மழையால் இடைக்கிடையே பாதிக்கப்பட்டும் இரண்டாம் நாள் ஆட்டம் முழுமையாகக் கைவிடப்பட்டும்கூட இந்த டெஸ்ட்போட்டி விறுவிறுப்பானதொரு கட்டத்தை எட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


# சமாதானப் பேச்சுக்களில் யசூஷி அகாஷியின் மதிப்புமிக்க பங்களிப்பை மறந்துவிட முடியாது

## ஜப்பானியத் தூதருடனான சந்திப்பில் நினைவுபடுத்தினார் பீரிஸ்

இலங்கையின் உள்நாட்டுப் போரின் போது ஜப்பான் அரசாங்கத்தின் சிறப்புத் தூதுவராக சமாதானப் பேச்சுகளின் போது யசூஷி அகாஷியின் மதிப்புமிக்க பங்களிப்பை மறந்து விட முடியாது எனத் தெரிவித்துள்ள வெளிவிகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், ஐதார்த் தங்களைப் புரிந்துகொண்டதற்காகவும், நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகள் பிரச்சினைகளுக்குநிரந்தரத்தீர்வுகளைக் காண்பதற்காகவும் சர்வதேச அரங்கில் ஜப்பான் வழங்கிய ஒத்துழைப்புகளுக்கும் நன்றி தெரிவித்தார்.



வெளிவிவகார அமைச்சில் ஜப்பானியத் தூதுவருடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இலங்கைக்கான ஜப்பானின் தொடர்ச்சியான ஆதரவையும் ஒத்துழைப்பையும் மீண்டும் வலியுறுத்திய வெளிவிகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் இலங்கை மற்றும் ஜப்பான் அனைத்து மட்டங்களிலும் சிறப்பான கூட்டாண்மைகளை பராமரித்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

தொற்றுநோயால் ஏற்படும் சவால்கள் இருந்தபோதிலும், நடைபெற்றுக்கொண்டிருக்கும் அனைத்து அபிவிருத்தித் திட்டங்களையும் சரியான நேரத்தில் நிறைவு செய்யவும், வரவிருக்கும் திட்டங்களை செயற்படுத்துவதை துரிதப்படுத்தவும் ஜப்பான் உறுதிபூண்டுள்ளதாகவும் தூதுவர் சுகியாமா தெரிவித்தார்.

அனைத்துகடினமானகாலங்களிலும் இலங்கைக்கு உறுதியான ஆதரவை வழங்கிய ஜப்பானிய அரசாங்கம் மற்றும் அதன் மக்களுக்கு நன்றிகளைத் தெரிவித்த வெளிவிகார அமைச்சர் பீரிஸ், கொவிட்-19 தொற்றுநோய்க்கு எதிரான போராட்டத்தில் ஜப்பான் இலங்கையின் மதிப்புமிக்க பங்காளியாகும் அதே வேளையில், ஜப்பானால் சமீபத்தில் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட 14 லட்சம் டோஸ் அஸ்ட்ரா ஜெனெகா தடுப்பூசிகள் தொடர்பாகவும் நினைவுகூர்ந்தார்.

மேலும் ஜப்பான் அரசாங்கத்தின் சிறப்புத் தூதுவராக சமாதானப் பேச்சுக்களின் போது யசூஷி அகாஷியின் மதிப்புமிக்க பங்களிப்பை நினைவுகூர்ந்த அமைச்சர் பீரிஸ், இலங்கையின் ஐதார்த் தங்களைப் புரிந்துகொண்டதற்காகவும், நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகள் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வுகளைக் காண்பதற்காகவும் சர்வதேச அரங்கில் அதன் மத்தியஸ்தப் பங்களிப்பிற்காக நன்றிகளையும் தெரிவித்தார்.

இலங்கை - ஜப்பான் இராஜதந்திர உறவுகளின் 70 ஆவது ஆண்டு நிறைவை அடுத்த ஆண்டு பொருத்தமான முறையில் கொண்டாடுவது தொடர்பாகவும் கவனத்தில் கொள்ளப்பட்டதுடன் இரு நாடுகளுக்குமிடையேயான வர்த்தகம், முதலீடு மற்றும் மக்களிடையேயான தொடர்புகளை மேலும் வலுப்படுத்தவும் ஒப்புதல்கள் அளிக்கப்பட்டன.






## ஜப்பான் அஸ்ட்ராஜெனெக்கா நன்கொடையாக மாலைதீவுக்கு

ஜப்பானில் தயாரிக்கப்பட்ட ஒரு லட்சத்து 12 ஆயிரம் அஸ்ட்ரா ஜெனெகா தடுப்பூசிகள் கொண்ட பொதிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை 'ஒல் நிப்பன்' எயர்வேய்ஸ் மற்றும் ஸ்ரீ லங்கன் எயர்லைன்ஸ் ஆகிய நிறுவனங்கள் ஒருங்கிணைந்து, ஜப்பானிய அரசின் நன்கொடையாக மாலைதீவுக்கு வழங்கப்பட்டன.

இந்த நன்கொடை ஜப்பானின் தொழில்நுட்பம் மற்றும் அதன் பலம் என்பவற்றை உலகிற்கு உணர்த்தும் விதமாக , உலகின் கடைக் கோடி மனிதனுக்கும் தடுப்பூசியை வழங்கவேண்டும் என்ற "கொவோக்ஸ்" சேவையின் குறுந்தூரப் பயணச் சேவைகளின் ஓர் அங்கமாகும்.

## இலங்கை – ஐரோப்பிய ஒன்றிய வர்த்தக உறவு முக்கியத்துவம் குறித்து இருதரப்பும் அவதானம்



ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. கண்காணிப்பு செயன்முறையின் கீழ் இருக்கும் ஆக்கபூர்வமான ஒத்துழைப்பு, சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக அரசாங்கத்தின் நடவடிக்கைகள் உட்பட பல விடயங்கள் தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் டெனிஸ் சாய்பி ஆகியோருக்கிடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது கவனத்தில் கொள்ளப்பட்டது.

இலங்கைக்கு வரவிருக்கும் ஐரோப்பிய ஒன்றியப் பணிகள் குறித்தும், கூட்டு ஆணைக்குழுவின் நிழலின் கீழ் தொடர்புடைய பணிக்குழுக்களைக் கூட்டுவது தொடர்பாகவும் இதன் போது சுட்டிக்காட்டப்பட்டதுடன் ஐரோப்பிய ஒன்றியம் - இலங்கை வர்த்தக உறவுகளின் முக்கியத்துவத்தையும் வெளிவிவகார அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசியல் மற்றும் பொருளாதாரத் துறைகளில் ஐரோப்பிய ஒன்றியத்துடனான இலங்கையின் பரந்த ஒத்துழைப்பு தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் தூதுவர் டெனிஸ் சாய்பியுடன் கலந்துரையாடியுள்ளார்.

கொவிட்-19 தொற்றுநோய் தொடர்பான சவால்களை எதிர்கொள்வதில் இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியம் நல்கிய ஆதரவுகள் தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் நன்றிகளை இதன் போது தெரிவித்தார்.

மேலும் தடுப்பூசிகள் உலகளாவிய ரீதியில் சமமாகக் கிடைத்தல் மற்றும் ஆராய்ச்சியை ஆதரித்தல் ஆகியவற்றுக்கான கொவேக்ஸ் வசதிக்காக ஐரோப்பிய ஒன்றியத்தின் பங்களிப்புகளுக்கும் பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

இலங்கையின் கடல் பகுதியில் எக்ஸ் பிரஸ் பேர்ள் கடல் சுற்றுச்சூழல் பேரழிவுக்குப் பின்னர், எதிர்காலத்தில் இலங்கையின் அனர்த்த ஆயத்தத்தை மேம்படுத்துவதில் ஐரோப்பிய ஒன்றியம் வழங்கிய ஆதரவு மற்றும் ஒத்துழைப்பு தொடர்பாகவும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் இதன்போது விளக்கமளித்தார்.

ஐரோப்பிய ஒன்றியம் - இலங்கை கூட்டு ஆணைக்குழுக் கட்டமைப்பிற்குள் இலங்கையின் வழக்கமான ஈடுபாடு மற்றும் ஐரோப்பியஒன்றியஜி.எஸ்.பி. கண்காணிப்பு செயன்முறையின் கீழ் இருக்கும் ஆக்கபூர்வமான ஒத்துழைப்பு, சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக அரசாங்கத்தின் நடவடிக்கைகள் உட்பட பல விடயங்களும் இதன் போது கலந்துரையாடப்பட்டன.

இலங்கைக்கு வரவிருக்கும் ஐரோப்பிய ஒன்றியப் பணிகள் தொடர்பாகவும், கூட்டு ஆணைக்குழுவின் நிழலின் கீழ் தொடர்புடைய பணிக்குழுக்களைக் கூட்டுவது பற்றியும் இதன் போது சுட்டிக்காட்டப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றியம் - இலங்கை வர்த்தக உறவுகளின் முக்கியத்துவத்தை வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் மீண்டும் வலியுறுத்தினார். மீன்வளத் துறையிலான ஒத்துழைப்பு தொடர்பான விடயங்களும் கலந்துரையாடப்பட்டன.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.08.2021இல் வெளியிடப்பெற்றது.